1973 பிப்ரவரி 12]

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, சுற்றுலாத் துறையினர் அச்சடிக்கும் அந்தப் புத்தகத்தில் சேலம் மாவட்டத்திலுள்ள ஏற்காடு சேர்க்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மலை வாசஸ்தலம் என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டிருக்கிறது. நானும் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்பதால் புறக்கணிக்கப்படாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, அந்தப் புத்தகத்தில் தமிழ் நாட்டின் ஒரு மிகப் பெரிய சாதனையான கூவம் நதியின் சிறப்பையும் சேர்த்து அச்சடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, சுற்றுலாப் பயணிகளைக் கவரத் தகுந்த வகையில் கூவம் நதி ஒரு சிறப்பான இடத்தைத் தற்போது பெற்றுள்ள காரணத்தால், அதுவும் புறக் கணிக்கப்படாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடையாறு வாய்க்காலின் குறுக்கே பாலம்.

* 135 வின.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

சென்னையில் சென்ட்ரல் பாலிடெக்னிக் பகுதியையும் இந்திரா நகர் பகுதியையும் இணைக்க இரண்டுக்கும் குறுக்கேயுள்ள அடையாறு வாய்க்காலுக்கு பாலம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சைதாப்பேட்டைக்கு எளிதில் சென்றுவர வசதியாயிருக்கும் பொருட்டு, இந்திரா நகர் இரண்டா வது அவெனியூவையும், தென் சென்னைப் புற நகர்ப் பகுதியின் மேற்கில் செல்லும் நெடுஞ்சாலையையும் இணைப்பதற்காக பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே பாலம் ஒன்றைக் கட்டுவதற்கான செயற் குறிப்புக்களை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 1971 மார்ச்சில் அனுப்பியது. பொருளாதார வகையில் அது இயலாத ஒன்று எனத் தெரியவந்ததால், அச்செயற் குறிப்பு தள்ளி போடப்பட்டது.